
# பரணி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ பரணி சக்தி**

பரம ஞானம், பரமசத்துவ மகத்துவம்,

பரம கைவல்ய நிமலம்.

**3. திருப்பாவை பாசுரம் – 21 பரணி இயல்பு**

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப

மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்

ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்

ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்

மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற்கண்

ஆற்றாது வந்த உன்னடிபணியு மாபோலே

போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/HHSX2YB7z4A**

**விளக்கம் :**

**“ பத்தாயிரத்தில் ஒருவன் பஜனை செய்வான்**

**லட்சத்தில் ஒருவன் சேவை செய்வான்**

**கோடியில் ஒருவன் தவம் செய்வான் ”**

அந்த தவஞானியே பரணி. இந்த பரணி ஆற்றல் உடைத்தனாய், ஊற்றமுடைத்தானாய், தோற்றமாய் நின்று தரணியை ஆளும் தர்மராஜனே

பரணி ஆவான். **மாறில்லா வள்ளி வாழ்க** என்ற தத்துவத்திற்கேற்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள், அண்டியவர்களை சமூக நீதியுடன் சமதர்மத்தை சத்துவ குணத்துடன் அளித்துக்காப்பார்.

இதைத்தான் பரணியில் பிறந்தால் தரணி ஆள்வார் என்று உரைத்தனரே. சத்துவ மகத்துவத்தை உலகறிய ஊர் அறிய செய்வீரே.

போற்றி போற்றி என புகழுதல் பரணிக்கு குளிர்ச்சியூட்டாதே, ஆனால் 'அப்பரணி ' என்று குளிர்த்தன்மையை சுட்டிக் காட்டி வெற்றி பெற வேண்டும். இதை ஏற்கும் திறன் பரணிக்கு அமையும் பொழுது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நிமலமாக்கி வெற்றி கொள்வான்.

மாற்றார் பரணிக்கு வலிகள் பல கொடுத்தாலும், அவை தொலைந்து உன் வாசற்கண் ஆற்றாது வந்து அடி பணிவார்கள். எனவே மாற்றார், மற்றவராயினும், மற்றவர்மாற்றாராயினும் அவர்கள் கருத்துக்களை கேட்டு உள்வாங்கி செயல்பட்டால் வெற்றி நிச்சயமாய் உண்டு. எனவே போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் என புகழ் பெற்றது.

உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே! பரணியே நீ தரணி ஆள்வாய், அறிவுள்ளவனே, அண்டியவர்களை காப்பவனே, பெரிய பெருமானே ஞான ஒளிச்சுடராய் எங்கும் நிறைந்தவனே, கோடியில் ஒருவன் நீ மாறில்லா வள்ளி வாழ்க என்கிற வசனத்திற்கு ஏற்ப எப்பொழுதும், பரமசத்துவத்தை பிசகாமல் பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்களே உன் இயல்பாகும். பால் எதிர்பொங்கி அருள் செய்யும், பாலோடு நீர் இருந்தாலும் பால் பொங்கும். அது போல பரணியோடு எவர் இருந்தாலும் அவருக்கு நன்மை நடக்கும்.

பரணிக்கு வரும் சோதனைகள் பலப்பல பகைவர்கள் புறமாயினும், அகமாயினும் ( மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை) அவர்களை வெற்றி பெரும் தனித்திறன் உனக்கு உண்டு.

பகைவர் அனைவரும் தோற்று, வேறு வழியின்றி உன்வாசல் தேடிவந்து, உன் பாதங்களில் விழுந்து வணங்குவதை போல் உன்னைப் புகழ்ந்து பாடி நாங்கள் வந்துள்ளோம். உறங்காது எழுந்திரும். பரணியே வருக பரணியே அருள்க!

பரணி சரண தீபம் ஏற்றி, அதாவது ஐந்து முகங்கள் கொண்ட தீபம் ஏற்றி தங்களுடைய சரணாகதியை செயல்படுத்தவும்.

## 4. வேதத்தில் பரணிஜோதி சக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

க்ருஷ்ணவர்ணாயை வித்மஹே
தண்டதராயை தீமஹி
தர்ம ராஜாய தீமஹி
தன்னோ பரணி ப்ரசோதயாத்;

சத்துவ மகத்துவம் நீ யன்றோ
நிமல கைவல்ய தத்துவமே
மும்மல எதிரிகள் அடங்குவரே
அவனியை ஆள்வாய் நமோ நமோ;

ஞானவடி வே நலம் தருவாய்
மோன படிம திறம் காண
ஆனை முதலே அதிபதியே
ஆசைகள் ஒடுங்கும் நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. பரணி கவிதை

சிற்றறிவுக்கும் நலம்சேர்க்கும் நெல்லிக்கனியே
முற்றறிவுக்குச் சொந்தக்காரராகிய பரிவட்டமே
தொட்டவை துலங்க, தொடாதவை கலங்க
மற்றவை விளங்க மாறிலா வள்ளியே

மனங்கவர் மா மணியே ; மலமிலா மனமே
மும்மலமும் நினக்கில்லையென முடிந்தமுடிவே

சுயம்பாய், சுயமாய், சுகமாய் சுரப்பவளே!
சுலப பிரசன்னமாய் வெற்றிகொள்ளும் நாயகியே!
சுவாஹா எனில் சுயஞ்ஜோதிக்கு செல்லும் சுடரே!
சுய தேவைகளை சத்துவ மகத்துவத்திலே காண்பவளே

சுய யுக்திகளை சொந்த கைபக்குவத்தில்
பய பக்தியுடன் பரமஞானம் சேர்க்கவே
லய பாவத்தில் கூட்டு கட்டின்றிய ஆவர்த்தனமே
கோபம் தணியவே தாபம் சேர்ப்பீரே!

ஐம்புலன்களை அய்யமின்றி ஆஹீதியென சேர்த்திடுக
அய்விரல்கள் சத்யதர்ம சாந்திப்ரேமயை பரப்பிடுக
ஐம்பூதங்கள் இடராவண்ணம் அஹிம்சை தந்திடுக
அய்யம்திரிபுரை ஆணவகன்மம் மாயைகளை மாற்றிடுக.

## 6. அபிராமி அந்தாதியில் பரணி சக்தி

**மனக்கவலை தீர**

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்

வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி ! வார்சடையோன்

அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்

திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

**மந்திர சித்தி பெற**

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை; சிந்தையுள்ளே

மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!

முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே

பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.

**மலையென வரும் துன்பம் பனியென நீங்க**

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்

கதியுறும் வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,

மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்

துதியுறு சேவடியாய் ! சிந்துரானன சுந்தரியே.

**பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட**

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்

வந்தரி; சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்

அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்

சுந்தரி; கைலத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பரணி சக்தி

| | |
|---|---|
| ஓம் ஸ்வயம்புவே நம | – சுயம்புவே போற்றி |
| ஓம் ஸம்பவே நம | – இன்பமளிப்பவனே போற்றி |
| ஓம் ஆதித்யாய நம | – ஆதித்யனே போற்றி |
| ஓம் புஷ்கராக்ஷய நம | – தாமரைக்கண்களே போற்றி |
| ஓம் மஹாஸ்வநாய நம | – வேத சப்தமே போற்றி |
| ஓம் அநாதிநிதநாய நம | – பிறப்பு, இறப்பு இல்லாதவனே போற்றி |
| ஓம் தாத்ரே நம | – தாதாவே போற்றி |
| ஓம் விதாத்ரே நம | – விதாதாவே போற்றி |
| ஓம் தாதுருத்தமாய நம | – தோழமையே போற்றி |
| ஓம் அப்ரமேயாய நம | – அகாரண அன்பனே போற்றி |
| ஓம் ஹ்ருஷீகேஸாய நம | – ஐம்புல நாயகனே போற்றி |
| ஓம் பத்மநாபாய நம | – பத்மநாயகனே போற்றி |
| ஓம் அமரப்ரபவே நம | – அமர ப்ரபுவே போற்றி |
| ஓம் விஸ்வகர்மணே நம | – விஸ்வகர்மனே போற்றி |
| ஓம் மநவே நம | – சிந்தனையே போற்றி |
| ஓம் த்வஷ்ட்ரே நம | – அணுவில் அடக்கமே போற்றி |
| ஓம் ஸ்தவிஷ்டாய நம | – அலையென விரிவாக்கமே போற்றி |
| ஓம் ஸ்தவிராய நம | – பழம்பொருளே போற்றி |
| ஓம் அக்ரஹ்யாய நம | – கிரகித்தலின் முடிவே போற்றி |
| ஓம் ஸாஸ்வதாய நம | – இயற்கையே போற்றி |
| ஓம் க்ருஷ்ணாய நம | – கிருஷ்ணனே போற்றி |
| ஓம் லோஹிதாக்ஷய நம | – செங்கண்ணனே போற்றி |
| ஓம் ப்ரதர்த்தநாய நம | – பிரளயத்தின் முடிவே போற்றி |
| ஓம் ப்ரபூதாய நம | – பிரபுத்துவமே போற்றி |
| ஓம் த்ரிக்குப்தாம்நே நம | – மூவுலக தோழனே போற்றி |

ஓம் பவித்ராய நம — பவித்ரமே போற்றி

ஓம் மங்கலாய – பரஸ்மை நம — பரமமங்களமே போற்றி

ஓம் ஈஸாநாய நம — இயக்கமே போற்றி

ஓம் ப்ராணதாய நம — இதய துடிப்பே போற்றி

ஓம் ப்ராணாய நம — முழு ஆற்றலே போற்றி

ஓம் ஜ்யேஷ்டாய நம — முதல் மரியாதையே போற்றி

ஓம் ஸ்ரேஷ்டாய நம — மூத்த குடியே போற்றி

ஓம் ப்ரஜாபதயே நம — பிரஜா ஈஸ்வரனே போற்றி

ஓம் ஹிரண்யகர்பாய நம — பிரம்மனின் ஆத்மாவே போற்றி

ஓம் பூகர்ப்பாய நம — உலகக் கருவே போற்றி

ஓம் மாதவாய நம — மதுவித்யா லட்சுமியே போற்றி

ஓம் மதுஸுதநாய நம — மதுவை வென்றவனே போற்றி

## 8. லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பரணி சக்தி

நவசம்பக – புஷ்பாப – நாஸாதண்ட – விராஜிதா
தாராகாந்தி – திரஸ்காரி – நாஸாபரண – பாஸுரா

கதம்ப – மஞ்சரீ – க்லுப்த – கர்ணபூர – மனோஹரா
தாடங்க – யுகளீ – பூத – தபநோடுப – மண்டலா

பத்மராக – சிலா – தர்ச – பரிபாவி – கபோலபூ
நவ – வித்ரும – பிம்பஸ்ரீ – ந்யக்காரி – ரதனச்சதா

சுத்த – வித்யாங்குராகார – த்விஜபங்க்தி – த்வயோஜ்வலா
கர்ப்பூர வீடிகாமோத ஸமாகர்ஷ – திகந்தரா

நிஜ – ஸல்லாப – மாதுர்ய – விநிர்ப்பர்த்ஸித – கச்சபீ
மந்த – ஸ்மித – ப்ரபாபூர – மஜ்ஜத்காமேச – மானஸா

அநாகலித – ஸாத்ருச்ய – சிபுகஸ்ரீ – விராஜிதா
காமேச – பத்த – மாங்கல்ய – ஸுத்ர – சோபித – கந்தரா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் பரணி சக்தி

சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை

அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்

திக்கெல்லாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே

ஆறுமுக ஸ்வாமி உன்னை அருட்ஜோதியாய்க் காண

அகத்துள்ளே குமரா நீ அன்பு மயமாய் வருவாய்

அமரத் தன்மையினை அனுகிரகித்திடுவாயே

வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்

வேல் கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே

தேவரைக் காத்த திருச்செந்தில் ஆண்டவனே

திருமுருகன் பூண்டியிலே திவ்ய ஜோதியான கந்தா

பரஞ் ஜோதியும் காட்டி பரிபூர்ணமாக்கிடுவாய்

திருமலை முருகா நீ திடஞானம் அருள் புரிவாய்

செல்வமுத்துக் குமரா மும்மலம் அகற்றிடுவாய்

அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே

அருணாசலக் குமரா அருணகிரிக்கு அருளியவா

திருப்பரங்கிரிக் குகனே தீர்த்திடுவாய் வினை முழுதும்

திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்

எட்டுக்குடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை

பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்

எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே

எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகா நீ

என்னுள் அறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்

திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா

அறிவொளியாய் வந்து நீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி பரணி சக்தி

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?

ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?

யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்

தானோ? பொருளாவது சண்முகனே.(3)

வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்

தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?

கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,

தொளைபட்டு உருவத் தொடு வேலவனே.(4)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் பரணி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வானஸ்பதி | வானஸ்பதி | மானாவதி | தனரூபி |

## 12. மூலமந்திரம்

ஓம்.. ஹ்றோம்... ஜூம்... ச:

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நெல்லி | வன்னி | விளா | செங்காலி |

## 14. பரிகாரம்

- 5 கிலோ சர்க்கரை, 5 கிலோ உப்பு நட்சத்திர நாளில் வாங்கி வைக்கவும்.
- பால், தயிர் குளியலில் சேர்க்கவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- ஆலயம் செல்லும் நேரம் காலை : 08.00 - 08.45 மணிக்கு சென்று வழிபடவும்
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்,** நல்லாடை - மயிலாடுதுறை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra